# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2019 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, கம்பெனிகள் (திருத்தச்) சட்டம்

---

*(2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*


*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2019, ஓகத்து மாதம் 09 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 8.00*** ***தபாற் செலவு : ரூபா 15.00***

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2019 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க,**
**கம்பெனிகள் (திருத்தச்) சட்டம்**

[2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத் தப்பட்டது]

ச.வ- ஓ. 70/2017

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள்**
**சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, கம்பெனிகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

சுருக்கப்பெயர்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் ஓராம் உட்பிரிவில் அதன் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஆ) அக் கம்பெனிக்கு, அதன் கம்பெனி இலக்கமாக தனித் தன்மைவாய்ந்த இலக்கமொன்றைக் குறித்தொதுக்குதல் வேண்டும்;

(இ) விண்ணப்பித்த கம்பெனிக்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் கூட்டிணைப்புச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) கம்பெனியொன்று கூட்டிணைக்கப்பட்ட அறுபது வேலை நாட்களுக்குள்ளாக -

(i) கம்பெனியின் பெயர்;

(ii) கம்பெனியின் பதிவிலக்கம்; அத்துடன்

(iii) கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி,

என்பனவற்றைக் குறித்துரைக்கவேண்டிய சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் புழக்கத்திலுள்ள நாளாந்த செய்தித்தாளில் வெளியிடப்படும் அறிவித்த லொன்றின்மூலம் பொதுமக்களுக்கு அறிவித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவினை நீக்குவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் (3) ஆம் உட்பிரிவில் "(1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(2) ஆம் உட்பிரிவின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்;

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது:-

"(ஆ) (i) முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட கம்பெனியின் பெயரானது, குழறுபடியை ஏற்படுத்தும் சாத்தியமுள்ள அளவுக்கு வேண்டுகோள் விடுக்கும் கம்பெனியின் பெயரையொத்திருக்குமிடத்தும்; அத்துடன்

(ii) முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட கம்பெனி, ஆட்சேபிக்கப்படும் பெயரால் பதிவுசெய்யப்படுவதற்கு முன்னரே வேண்டுகோள் விடுக்கும் கம்பெனியானது, அதன் தற்போதைய பெயரால் பதிவு செய்யப்பட்டிருந்தவிடத்தும்,

வேறொரு கம்பெனியால் அல்லது பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனியொன்றால் 5(1)(ஈ) ஆம் பிரிவின் மற்றும் 9(2) ஆம் பிரிவின்கீழ் தரப்படுகின்ற பெயரின் பகிரங்க அறிவித்தலிலிருந்து மூன்று மாதங்களினுள் அவ்வாறு செய்யுமாறு பதிவாளருக்கு வேண்டுகோளொன்று விடுக்கப்படுமிடத்து; அல்லது".

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*